VAALIPAN MINISTRIES
SRI LANKA

# வாலிபன்
# VAALIPAN

இதழ் - 55 / வாலிபர்களுக்கான மாதாந்த சஞ்சிகை / ஆனி - 2012



## 198வது மெதடிஸ்த தினம்

"அற்பமான ஆரம்பத்தின் நாளை யார் அசட்டைபண்ணலாம்?..."
(சகரியா 4 : 10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாலிபன்
# VAALIPAN

கிறிஸ்துவுக்குள் அன்பான 'வாலிபன்' வாசகர்களுக்கு!

கிறிஸ்து இயேசுவின் நாமத்தில் வாழ்த்துக்கள்!

மூன்று, நான்கு தலைமுறைகளைத் தாண்டி, கிறிஸ்துவின் நாமத்தைச் சுமந்து நிற்கும் மெதடிஸ்த திருச்சபைக்காக ஆண்டவரைத் துதிக்கின்றோம். 198 வருடங்கள் கடந்து வந்த நிலையில் கடந்த காலங்களைத் திரும்பிப் பார்ப்போமானால் கர்த்தர் இந்த ஊழியத்தினூடாகச் செய்த அளப்பரிய காரியங்கள் தான் எத்தனை எத்தனை? ஆண்டவரின் உடன் சீடர்கள் பன்னிருவர் ஆரம்பித்த ஊழியங்களைப் பார்க்கிலும் "ஜோன் வெஸ்லி" ஐயரின் தரிசனத்துக்கூடாக ஆரம்பிக்கப்பட்டு, இன்றும் நிலைத்து நிற்கும் "மெதடிஸ்தம்" எனும் இவ்வூழியம் எவ்வளவு மகிமையானது என்றால் அது மிகையாகாது. காரணம் உலகில் எத்தனை நாடுகளில், எத்தனை மொழிகளில் தொடர்ந்தும் வளர்ந்துகொண்டு வருவதை எண்ணிப் பார்ப்போமாக! இவ்வூழியம் இன்னும் ஆயிரமாயிரமான ஜனங்களை சந்திக்கவும், அவர்களை கிறிஸ்துவின் பாதையில் நடத்தவும் அனைவரும் கரங்களைக் கோர்ப்போமாக!

ஆரம்ப காலங்களில் 'மிஷனரிகள்' கடல்கடந்து சென்று தமது தியாகத்தின் உச்சக் கட்டமாகத் தமது உயிர்களையே தியாகம் செய்து, "தேவ வசனத்தை சுவிசேஷமாக பிரசங்கித்தார்கள். அக்காலங்களில் இருந்த சூழ்நிலைகள், வாய்ப்புக்கள், வசதிகளோடு ஒப்பிட்டுப் பார்க்கையில் தற்காலத்தில் நமக்குள்ள சௌகரியங்கள் தான் எத்தனை அதிகம் அதிகம்! எனினும், இரண்டே இரண்டு கோடி இலங்கை ஜனங்கள் இன்னும் எத்தனை பேர் ஆண்டவராகிய **இயேசுவை, 'தமது மீட்பரை'** அறியாமல் இருளில் வாழ்கின்றார்கள். இன்று நாம் கடல்கடந்து போவதற்கு முன்பாக நமது 25 மாவட்டங்கள் உள்ள சிறிய தேசத்தில் ஒளியேற்ற புறப்படுவோமாக! ஏன் நமது மாவட்டத்தில், நமது கிராமத்தில், நமது குடும்பங்களில் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுவிட்டதா? என்பதை தியானத்துடன் சிந்திப்போமாக! அல்லாவிட்டால், நோவாவின் காலத்தில் மக்கள் **'நிர்விசாரமாய்'** வாழ்ந்ததைப் போல நாமும் வாழ்கின்றோமா? சற்றே சிந்தித்துப் பார்ப்போம்!

கிறிஸ்துவை அறிந்தவர்களின் வீடுகளிலே போய் கிறிஸ்துவை அறிவிப்பதை விடுத்து, கிறிஸ்துவை அறியாதவர்கள் மத்தியில் ஊழியம் செய்யவே அழைக்கப்படுகின்றோம். ஏனெனில், கிறிஸ்துவை அறிந்தும் நிர்விசாரமாய் வாழ்பவர்களுக்கு கிறிஸ்துவின் வருகையில் என்ன நடக்கும் என்பதை நாம் நன்கறிவோம். ஆனால், அவரை இன்னும் அறியாமல் வாழ்கின்ற அல்லாவிட்டால் அறிவதற்கு வாய்ப்புக்களின்றி இருப்பவர்கள் மத்தியில் புறப்பட உங்களைத் தான் ஆண்டவர் அழைக்கின்றார். பிரியமானவர்களே! சிந்தியுங்கள்!! செயற்படுங்கள்!!!

*கிறிஸ்துவின் பணியில்*
*ஆசிரியர்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாலிபன்



# ஜோன் வெஸ்லி

## கனம் ஜோன் வெஸ்லி ஐயரின் வாழ்க்கைச் சரிதம் தொடர் நிகழ்வாய்....... 25

சகோ. இராஜநாயகம் சுரேந்திரன்

**ஜோ**ன் வெஸ்லி ஐயர் யாவற்றையும் உற்றுநோக்கும் கண்களையும், இரக்கம் நிறைந்த இருதயத்தையும் உடையவராக இருந்தார். தாம் கண்ட வாழ்வில் அனுபவித்த யாவற்றையும் உள்ளபடியே குறிப்பேடுகளிலும், தம்மால் எழுதப்பட்ட நூல்களிலும் குறித்து வைத்துள்ளார். அவருடைய பெருமூச்சுகளையும், கண்ணீரையும், துக்கங்களையும், ஜெபங்களையும் அவரால் எழுதப்பட்டு வெளியிடப்பட்ட அனைத்து நூல்களிலும் இன்றும் எம்மால் காணக்கூடியதாய் உள்ளது. அந்நாட்களில் இங்கிலாந்து தேசத்தில் காணப்பட்ட அனைத்து வாழ்க்கை நிலைகளையும், அவைகளிலே மறைந்து காணப்பட்ட அனைத்து உண்மைகளையும், பாவ நிலைகளையும் கூட வெஸ்லி அவர்கள் தம்முடைய நூல்களில் சுட்டிக்காட்ட ஒரு போதும் அவர் தவறியதேயில்லை.

இங்கிலாந்து தேசத்தின் மக்களுடைய சமுதாய, பொருளாதார, அரசியல் முன்னேற்றம் யாவும் வெஸ்லி ஐயரின் இருதயத்திலிருந்தன. மக்களாட்சியின் நற்பலன்கள் யாவும் வெஸ்லியின் காலத்தில் ஏற்பட்ட மாபெரும் உயிர் மீட்சியின் விளைவே என்பது நிரூபிக்கப்பட்ட உண்மையாகும். கடந்த இருநூறு ஆண்டுகளாக இங்கிலாந்து நாட்டு மக்கள் பெற்றுக் கொண்ட ஆசீர்வாதங்கள் பற்றி எழுதத் துணிவோமாயின், இத்தொடரின் நோக்கமே வேறு திசையில் பயணிக்கத் தொடங்கிவிடுமென்பது மறுக்க முடியாத உண்மையாகிவிடும். ஆனாலும், உயிர் மீட்சியினால் உண்டான நன்மைகளையும், வெற்றிகளையும் சிறிய அளவிலேனும் ஆய்வு செய்வது இத்தொடருக்கு பெலமாக அமையுமென சிந்திக்கிறேன். ஏனெனில் தேசத்தை ஆக்கிரமித்துக்கொண்ட, இருளின் வல்லமையை எதிர்த்த நீதியின் சக்திகளுடைய போராட்டம் தொடங்குவதற்கு முன்னதாக இருந்த தேசத்தின் நிலையை நாம் நிச்சயம் அறிந்தவர்களாக இருக்க வேண்டும்.

ஐரோப்பாக் கண்டத்தில் துன்மார்க்கரெனப் பெயர்பெற்ற "ரைன்" நதிப் படகோட்டிகளும் கூட, இங்கிலாந்தின் மக்களைக் காட்டிலும், அதிகமாகத் தெய்வீகக் காரியங்களில் பயபக்தியைக் காட்டுகிறார்களென வெஸ்லி ஐயர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டார். இவைபற்றி வெஸ்லி அவர்கள் தனது நாட்குறிப்பேட்டில் எழுதும்போது "அப்படகோட்டிகள் தேவனுடைய நாமத்தை வீணிலே வழங்கியதாக ஒருபோதும் நான் காணவில்லை. ஆகையால் தேவனுக்கடுத்த காரியங்களோடு விளையாட்டுத்தனமாக இருப்பது இங்கிலாந்து தேசத்திற்கு மட்டுமே உரியது" எனத் துயரமாகத் தனது டயறியில் எழுதியுள்ளார். "வால்டர்பென்" என்ற சமூக எழுத்தாளர் இங்கிலாந்தின் அக்கால நிலை குறித்து எழுதும் போது "18ம் நூற்றாண்டில் முரட்டுத்தன்மையும் சீர்கேடும், அவலட்சணமான பேச்சும், பாடல்களும் அந்நாட்களில் எழுதப்பட்ட இலக்கிய நூல்களிலும், நாடகங்களிலும், கவிதைகளிலும், கட்டுரைகளிலும், கதைகளிலும் காணப்படுகின்றன. இந்த அவல நிலை, ஏழைகள், நிர்ப்பந்தமான விலைமாதர்கள் மத்தியில் மட்டுமன்றி எல்லா வகுப்பினரிடையிலும் காணப்படுகிறது" எனக் குறிப்பிட்டுள்ளார்.

மிகவும் பெயர் பெற்ற எழுத்தாளராகிய 'கோல்ட் ஸ்மித்' என்பவர் எழுதும் போது, "இங்கிலாந்தில் காணப்பட்ட அனைத்துக் குணநலன்களைக் குறித்து தனது நூல்களிலே வெறுப்புடன் கூடிய சொற்களையே அதிகம் உச்சரிக்கிறார். மக்களிடையே காணப்பட்ட வெறுப்பூட்டக்கூடிய பண்புகளை "குடிபோதையை ஊட்டக்கூடிய கருவிகள்" என அழைக்கின்றார். இன்னுமோர் வரலாற்றாசிரியரான 'சாள்ஸ் கூப்பர்' அவர்கள் குறிப்பிடும்போது "இங்கிலாந்தின் சாபக்கேடாக நாடக மேடையே அமைகின்றது. நாடக மேடையானது துன்மார்க்கத்தின் படுக்கையாகும். ஒரு நாடக அரங்கு அமைக்கப்பட்டவுடனே அதைச் சுற்றிலும் விலை மாதர்களின் குடியிருப்புக்களும் தோன்றிவிடுகின்றன" எனக் கடுமையாகச் சாடுகிறார்.

நற்பண்புகளில் இங்கிலாந்து தேசமானது குன்றிப்போன நிலையில் காணப்பட்டது என்பது பற்றிக் குறிப்பிடும்போது, அதை வெறும் தந்திரமான மேற்பூச்சுக்களைக் கொண்டு பூசமுடியாது. அக்காலமானது மிகவும் துன்மார்க்கமானதும், குடிவெறியினாலும் நிறைந்திருந்தபோதிலும், அதைப் பிரகாசமுள்ள பகுத்தறிவின் காலமெனச் சிலர் துணிவுடன் சொல்ல முற்பட்டுள்ளனர். இக்கருத்து எவ்வளவு தவறானது என்பதை "வாலிபன் சஞ்சிகையை வாசிக்கின்ற அன்பர்களுக்கு" இலண்டன் மாநகரின் ஒரு பிரசித்தி வாய்ந்த மதுபானக் கடையொன்றின் வாசலிலே தொங்கிய விளம்பரக் குறிப்பொன்றின் மூலம் அதி தெளிவாகப் படம்போட்டுக் காட்ட முற்படுகிறேன். "ஒரு காசுக்கு மதுபானம் குடியுங்கள், இரண்டு காசுகளுக்கு குடித்து வெறிக்கும்வரை குடியுங்கள்" மேற்கண்ட விளம்பரம் இங்கிலாந்து நாட்டின் பல பகுதிகளிலும் மிகவும் பிரபல்யம் பெற்ற வாசகங்களாகக் காணப்பட்டமை விசேட அம்சக்குறிப்புரையாகும். இப்படியாக மதுபானம் அருந்துவோரின் எண்ணிக்கை பெருகத் தொடங்கியது. இலண்டன் நகரிலே ஒவ்வொரு இருபத்தைந்து வீடுகளுக்கும் ஒரு மதுபானக் கடை இருக்குமளவிற்கு நிலைமை மோசமடைந்தது.

**(வெஸ்லி மீண்டும் வருவார்...)**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**வே**ல்ஸ் நாட்டில் இலான் பிரன்ஜல் எனும் சிற்றூரில் ஜேம்ஸ் யோன்ஸ் எனும் நெசவுத் தொழில் செய்யும் பக்தியுள்ள குடும்பத்தில் 1972ம் வருடத்தில் ஒரே மகளாக **மேரி யோன்ஸ்** எனும் மகள் பிறந்தாள். அந்நாட்களில் வேதாகமம் கிடைப்பது மிகமிக அரிது. இப்போதுபோல் குறைந்த விலைக்கு கிடையாது. பெரிய பணக்காரர்களின் வீடுகளில் மட்டும்தான் வேதாகமம் உண்டு. ஆனால் மேரியின் வீட்டில் வேதாகமம் கிடையாது. மேரிக்கோ வேதாகமத்தில் உயிர். வேதாகமத்திலுள்ள கதைகள் எல்லாம் மேரிக்குத் தெரியும். ஆனால் வேதாகமக் குறைபாட்டினால் மேரி தனது தந்தையின் சிநேகிதன் 2 மைல் அப்பால் உள்ள வீட்டிற்கு அடிக்கடி போய் வாசித்துவிட்டு வருவாள். தனது பத்து (10) வயதில் இருந்து வேதாகமம் ஒன்று வாங்குவதற்காக தனது கைச்செலவுக்குக் கொடுத்த காசு, கோழி முட்டை விற்று, பின் மற்ற வீடுகளுக்குப் போய் பணம் சேர்த்து உண்டியலில் சேர்த்து, ஆறு வருடங்களின் பின் வேதாகமம் வாங்கக்கூடிய பணம் கிடைத்தது. தனது 16 வயதில் பணம் சரியாக இருந்தது. ஆனால் வேதாகமம் வாங்குவதற்கு இடம் தெரியவில்லை. "பாலா" என்ற ஊரில் வேதாகமம் இருப்பதாக அறிந்துகொண்டாள். ஆனால் அந்த ஊர் 25 மைல்களுக்கு அப்பால் உள்ளது. எப்படிப் போவது, நடந்தே செல்ல வேண்டும். பெற்றோரின் அனுமதி கேட்க வேண்டும். முதலில் பெற்றோர் மறுத்தனர். 16 வயது இளம் வாலிபப் பிள்ளை எப்படி தனிமையாக நடந்து செல்வது என்று பின்னர் ஜெபத்தின் பின் அனுமதி கொடுத்தனர். அதிகாலை எழுந்து தேவையான சாப்பாட்டை தயார் செய்து செருப்பும் தேய்ந்துபோனபடியினால் அவற்றை ஒரு சிறு பையில் போட்டு, முக்கியமான இடத்திற்குப் பாவிக்கலாம் என்ற துணிவுடன் ஆயத்தமாகி, மாலை 6.00 மணிக்கு "பாலா" என்ற கிராமத்தை அடைந்தாள். அங்கு, "எட்வேட்" என்ற போதகர் வீட்டை அடைந்தாள். சரியான களைப்பின் மத்தியில் தனது வேதாகமத்தைப் பற்றிய விருப்பதைக் கூறினார். ஆனால் அவரிடம் வேதாகமம் இல்லை. இன்னும் இரண்டு மைல் தொலைவில் உள்ள "தோமஸ்" போதகர் என்பவரின் வீட்டில்தான் வாங்க முடியும். விடிந்தபின் செல்வோம் என்று கூறி இரவில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாப்பாட்டைக் கொடுத்து படுக்கவிட்டு விடிந்தபின், எட்வேட் போதகரின் உதவியுடன் "தோமஸ்" போதகர் வீட்டை அடைந்தார்கள். தோமஸ் போதகரிடம் எட்வேட் போதகர் மேரி 10 வயதிலிருந்து 16 வயது மட்டும் வேதாகமம் வாங்கப் பட்ட பாடுகள், 25 மைல் நடந்து வந்த சம்பவம் எல்லாம் சொல்லி - வேதாகமத்தில் எப்படி பற்றுள்ளவள் என்று விபரித்துச் சொன்னார். இதைக் கேட்ட போதகர், "வேதாகமம் தன்னிடம் இல்லையே! இருந்தவற்றையெல்லாம் கொடுத்து முடித்து விட்டேனே! தற்போது உள்ளது ஒரு வேதாகமம் மாத்திரம்தானே! அதற்கும் காசு வாங்கியது பற்றி எப்படி சொல்வது?" என்று யோசித்துக் கொண்டிருந்தார். மேரி பொறுமையை இழந்து, பதிலை எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள். பின் போதகர் சொன்னார், "வேதாகமம் முடிந்துவிட்டது" என்று. இதைக்கேட்டவுடன் மேரி தேம்பித் தேம்பி அழ ஆரம்பித்தாள். இதைப் பார்த்த போதகருக்கு என்ன செய்வதென்று தெரியாமல் துக்கத்துடன் இருந்து, பின் இன்னொருவருக்குக் கொடுக்க வைத்திருந்த அந்த பைபிளைக் கொடுத்தார். அவள் மிகவும் சந்தோஷத்துடன், திரும்பவும் 25 மைல் நடந்து சென்று வீட்டை அடைந்து சங்கீதம் 150ஐ வாசித்து பெற்றோருடம் ஜெபித்தாள். இதன் பின்தான் பிரித்தானியாவில் வேதாகமச் சங்கம் உருவாகிற்று.

**சகோதரி. கேமாதேவி**
**தன்னாமுனை.**


**"உன்னுடைய இடத்தில் நான்"** என்கிற 'வாலிபன்' ஊழியத்தினால் வெளியிடப்படுகின்ற சுவிசேஷ துண்டுப் பிரதி தயாராயுள்ளது. நீங்களும் சுவிசேஷம் அறிவிக்க இது மிகவும் உதவியாயிருக்கும். தேவையாயின் உடனடியாகத் தொடர்பு கொள்ளவும். இலவசமாய் அனுப்பி வைப்போம்.




**தொடர்புகளுக்கு :**

**மெதடிஸ்த வாலிபர் ஒன்றியம்**
மெதடிஸ்த ஆலயம் - கோட்டைமுனை.
திருமலை வீதி, மட்டக்களப்பு.
மின்னஞ்சல் : vaalipan_kyf@yahoo.com
077 7813269, 077 2335106,
077 9584930, 077 7718847




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# பரிசுத்த வேதாகமம்

இன்றைய நவீன காலகட்டத்தில் எமது கைகளில் விதவிதமான வேதாகமங்கள் கிடைக்கின்றன. கண்ணுக்கு கவர்ச்சியாகவும், அழகாகவும் கைக்குள் அடக்கக்கூடிய வகையிலும் அனேக மொழிகளிலும் கிடைக்கின்றன. எமது வேதாகமத்தைப் பற்றி நாம் அறியவேண்டாமா? கட்டாயமாக அறிய வேண்டும்.

எமது வாழ்க்கையில் பல வகையான துக்கம், வெறுப்பு, இழப்பு நேரிடும் போது இதற்கு என்ன செய்வது என்று அறியாது தவிக்கிறோம் அல்லவா? ஆனால் பரிசுத்த வேதாகமத்தில் இப்படியான சூழ்நிலைகளில் நாம் என்ன செய்ய வேண்டும் என்று கர்த்தர் இவ்வேதாகமத்தின் மூலம் கற்றுத் தந்திருக்கிறார்.

எம்முடைய பரிசுத்த வேதாகமத்தின் ஆசிரியர் பரிசுத்த ஆவியானவரே. தேவன் அவருடைய 40 தேவ பிள்ளைகளைக் கொண்டு இவ்வேதாகமத்தை எழுதியுள்ளார். முழு வேதாகமத்தில் 66 புத்தகங்கள் உள்ளன. இந்த வேதாகமம் 2 பெரும் பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. ஒன்று **பழைய ஏற்பாடு** மற்றது **புதிய ஏற்பாடு.** இதில் குறிப்பிடப்படும் "**ஏற்பாடு**" என்பதன் அர்த்தம் "ஒப்பந்தம்" அல்லது "உடன்படிக்கை" எனப்படும்.

பழைய ஏற்பாடு முதன் முதலில் யூதர்களின் மொழியாகிய எபிரேய மொழியில் எழுதப்பட்டது.

பழைய ஏற்பாடானது கிட்டத்தட்ட கி.மு. 1450 இற்கும், கி.மு. 400 இடைப்பட்ட 1050 வருட காலத்தில் யூத மார்க்கத்தைச் சேர்ந்த தீர்க்கதரிசிகளினால் எழுதப்பட்டது. பழைய ஏற்பாட்டைப் பார்த்தால் உலகம் ஆரம்பத்திலிருந்து கி.மு. 2000 வரையிலான உலக சரித்திரமும் கி.மு. 2000 முதல் கி.மு. 400 வரையிலான யூத மக்களின் சரித்திரமும் எழுதப்பட்டுள்ளது. பழைய ஏற்பாடானது ஆரம்ப காலத்தில் யூதர்களுடைய வேத நூலாகக் காணப்பட்டது. யூதர்கள் வேதாகமத்தை தேவ ஆவியானவரால் அருளப்பட்ட அதிகாரபூர்வமான வார்த்தையாக ஏற்றுக்கொண்டனர். தொடர்ந்து வந்த காலப் பகுதியில் கிரேக்க மொழியில் மொழிபெயர்ப்பு பரிசுத்த வேதாகமத்தின் முதல் பதிவாகியதோடு "பழைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்பாடு'' என்கின்ற பெயரையும் பெற்றது.

பழைய ஏற்பாட்டு நூல்களை சரித்திரங்கள், கவிதை நூல்கள், தீர்க்கதரிசன நூல்கள் என்று வகைப் படுத்தலாம். ஆதியாகமம் முதல் எஸ்தர் வரையான (17) நூல்கள் சரித்திர நூல்களாகவும், யோபு முதல் உன்னதப்பாட்டு வரையிலான (5) நூல்கள் கவிதை நூல்களாகவும், ஏசாயா முதல் மல்கியா வரையி லான மிகுதி (17) புஸ்தகங்களும் தீர்க்கதரிசன நூல்களாகவும் அழைக் கப்படுகின்றன. சரித்திர நூல்களுக் குள் முதல் 5 நூல்களும் ''பஞ்சா கமங்கள்'' என அழைக்கப்படும்.

புதிய ஏற்பாடானது கடவுள் இயேசு கிறிஸ்துவின் சாயலாக மக்களோடு செய்துகொண்ட புதிய உடன்படிக் கையை குறிக்கின்றது. புதிய ஏற்பாடு கி.பி. 1ம் நூற்றாண்டில் கிறிஸ்துவின் அப்போஸ்தலர்களால் கிரேக்க மொழியில் எழுதப்பட்டது.

(தொடரும்...)

**உதவி :** திருவிவிலியம் இணையம்
www.tamilarticle.com
புனித வேதாகமத்தின் புதுமை வரலாறு

சகோ. கு. சுரேன்

# கவிதைப்போட்டி - 39

கீழேயுள்ள வசனத்திற்குப் பொருத்தமான சமகால சிந்தனையோடு 4 வரிகளுக்குள் அடங்கக்கூடிய உங்கள் மனதில் தோன்றும் கவிதைகளை தபாலட்டையில் எழுதி அனுப்புங்கள். சிறந்த கவிதைகள் எதிர்வரும் இதழில் பிரசுரிக்கப்படுவதுடன் பரிசில்களும் வழங்கப்படும்.

**"ஒருவனை அவன் தாய் தேற்றுவது போல்..."**
**(ஏசாயா 66:13)**

இறுதித் திகதி 04.07.2012

## கவிதைப் போட்டி - 38ல் வெற்றிபெற்ற சிறந்த கவிதை

**"கர்த்தாவே உமது செய்கைகளால் என்னை மகிழ்ச்சியாக்கினீர்"**
**(சங்.92:4)**

மரணத்துப்போன என் வாழ்வை மலர்ந்திடச் செய்தவரே
பொய்யான மாயை எனும் லோகத்தின் மாயையிலிருந்து மீட்டவரே
எனக்காய் பலியாகி எனக்காய் உயிர்த்தவரே - உம்
செய்கையால் என்னை பூரிப்பாக்கிய உன்னதர் நீர் ஒருவரே


தியாகராஜா ஸ்டீபன்
விபுலானந்த வீதி,
வாழைச்சேனை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறுக்கெழுத்துப் போட்டி - 54

உருவாக்கம் : J.சேரா




## இடமிருந்து வலம்

05) புதிய எருசலேமின் நகரத்து மதிலின் அஸ்திபாரங்கள் இவற்றால் அலங்கரிக்கப்பட்டிருந்தன. (கடைசி 2 எழுத்துக்களும் மாறியுள்ளன).

06) தேவன் இதற்கு ஏறி, சிறைப் பட்டவர்களைச் சிறையாக்கிக் கொண்டு போனார் என்கிறார் தாவீது (திரும்பியுள்ளது).

08) சந்தேகப்படுகிறவன் கடலின் இதற்கு ஒப்பாயிருக்கிறான் (திரும்பியுள்ளது).

10) ஆரோனுடைய கோல் துளிர்த்து, இப்பழங்களைக் கொடுத்தது.

12) கர்த்தர் விரும்புகிற பலி.

## மேலிருந்து கீழ்

01) இயேசுகிறிஸ்துவின் இது சகல பாவங்களையும் நீக்கி நம்மை சுத்திகரிக்கும்.

02) இதன்மேல் பசிதாகமுள்ளவர்கள் பாக்கியவான்கள்.

03) மரியாள் தன்னை விட்டெடுபடாத நல்ல இதனைத் தெரிந்துகொண்டாள்.

04) ஜனங்கள் ஆரவாரம் செய்தபோது எரிகோவின் இது இடிந்து விழுந்தது (தலைகீழ்).

07) வாக்குத்தத்தம் பண்ணிய தேவன் இப்படிப்பட்டவராயிருக்கிறார்.

08) பர்வதங்கள் இது பெயர்ந்தாலும் தேவ கிருபை நம்மை விட்டு விலகாது (தலைகீழ்).

09) ஆபிராமின் வீட்டு விசாரணைக்காரனான எலியேசரின் ஊர் (இறுதி எழுத்து இல்லை).

10) ஆதியிலே இது இருந்தது என்கிறார் யோவான் (இறுதி எழுத்து இல்லை).

11) யோபின் உள்ளங்கால் தொடங்கி உச்சந்தலை மட்டும் உண்டானது (தலைகீழ்).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 53 இற்கான விடைகள்

**இடமிருந்து வலம்**

01) துதி
04) தந்அ (அந்தம்)
06) க்லாபேம (மக்பேலா)
08) தேற்றரவாளன்
12) வெள்ளைப்போள (வெள்ளைப்போளம்)
13) கர்தி (கதிர்)

**மேலிருந்து கீழ்**

02) திக்கற்ற பிள்ளை
03) தைபே (பேதை)
05) அக்கோ
07) மனோவா
09) த்னாம்தி (திம்னாத்)
10) லேப்கா (காலேப்)
11) ம்ளக (களம்)

**குறுக்கெழுத்துப் போட்டி 53க்கான சரியான விடை அனுப்பியவர்களில் பரிசுக்குரிய அதிஷ்டசாலி**

**திருமதி.மிரிஜா பிரியதாஸ்**
பிரதான வீதி, பெரிய கல்லாறு-01.

இப்போட்டியில் வெற்றி பெறுபவர் ஒரு வருடத்திற்கான எம் இதழைத் தொடர்ந்து இலவசமாகப் பெறுவார்.

**குறுக்கெழுத்துப்போட்டி 54ற்கான விடைகளை அனுப்ப வேண்டிய கடைசித் திகதி : 04.07.2012**

**அனுப்ப வேண்டிய முகவரி :**

**ஆசிரியர்,**
**குறுக்கெழுத்துப்போட்டி - 54**
**"வாலிபன்",**
**கோட்டைமுனை மெதடிஸ்த ஆலயம்**
**மட்டக்களப்பு.**



## சிறுவர்களுக்கான

## வினா விடைப் போட்டி இலக்கம் - 46

1) யவீருவின் வீட்டிற்கு இயேசு அழைத்துச் சென்ற சீஷர்கள் யார்?

..........................................................................................

2) இயேசுவால் எழுப்பப்பட்ட யவீருவின் மகளுடைய வயது என்ன?

..........................................................................................

3) விதைக்கிறவன் உவமையில் இயேசு விதையை எதற்கு ஒப்பிடுகின்றார்?

..........................................................................................

4) பிரேதக் கல்லறையில் வாழ்ந்து, இயேசுவுக்கு எதிர்கொண்டு வந்த அசுத்த ஆவி உள்ள மனுஷனின் பெயர் என்ன?

..........................................................................................

5) இயேசு லேகியோனிலிருந்து அசுத்த ஆவிகளை விரட்டியபோது மேட்டிலிருந்து பாய்ந்த பன்றிகள் ஏறக்குறைய எத்தனை?

..........................................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வினா விடைப் போட்டி 45 இற்கான விடைகள்**

1) பேதுரு
2) இடிமுழக்க மக்கள்
3) யாக்கோபு, யோவான்
4) ஜெப ஆலயத்தில்
5) ஏரோதியரோடு

**வினா விடைப் போட்டி 45ல் சரியான விடை எதுவும் பெறப்படவில்லை.**



- **இப்போட்டியில் வெற்றி பெறுபவர் அழகிய புத்தகம் ஒன்றினைப் பரிசாகப் பெறுவர்.**
- **வினா விடைப்போட்டி 46இற்கான விடைகளை அனுப்ப வேண்டிய கடைசித் திகதி : 04.07.2012**

**அனுப்ப வேண்டிய முகவரி :**
**ஆசிரியர்,**
**வினாவிடைப் போட்டி - 46**
**'வாலிபன்' -**
**கோட்டைமுனை மெதடிஸ்த ஆலயம்,**
**மட்டக்களப்பு.**

## போட்டி பற்றிய நிபந்தனைகள் :

- 16 வயதிற்குட்பட்டவர்களாய் இருக்க வேண்டும்.
- ஞாயிறு பாடசாலை அதிபர் / ஆசிரியரின் கையொப்பத்துடன் பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம் போன்றவை தெளிவாய் எழுதப்பட்டிருக்க வேண்டும்.



# மரணத்தை வென்றவர் நம் இயேசு

பாவத்திலே மாளும் பாவிகளுக்காக
பரிதவித்த நம் தேவன்
பாரினிலே அவதரித்தார் பரமசுதனாய்
பாடுகள் பல சுமந்து பாவிளை மீட்டார்
பாவம் செய்யாத நீதிபரர்.

மரணித்த மனிதர்களை உயிர்ப்பித்த நம் தேவன் - தன்
மரணத்தை வெல்லாமல் இருப்பாரோ!
சரீர ஆலயம் சரிந்தால் அதை
சரி செய்வேன் நாட்கள் மூன்றுக்குள் என்ற வேளை
சற்றும் சிந்திக்க மறந்தனர் அந்த நாளை

மரணத்தை வென்ற நம் இயேசு
மக்கள் (சீஷர்) மத்தியில் தோன்றி
மறந்தீர்களோ நான் இயம்பிய வார்த்தைகளை - என்றும்
திக்கற்றவர்களாய் விடேன் தக்க தருணத்தில்
பக்கபலனாக தருவேன் பரிசுத்த ஆவியை

அந்த நாள் வந்தவேளை
ஆதித் திருச்சபையில் இருந்தனர்
அறுபதின் இருமடங்கு ஆட்கள்
அனைவரும் பெற்றனர் பரிசுத்த ஆவியை
அன்று முதல் பெருகினர் பல்கோடி விசுவாசியாய்.

**– பரா –**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அழிவை நோக்கி உலகமும், மகிமையுள்ள இரண்டாம் வருகையும்

**பின்பு நான் புதிய வானத்தையும் புதிய பூமியையும் கண்டேன். முந்தின வானமும் முந்தின பூமியும் ஒழிந்துபோயின... - (வெளி 21:1)**

இன்று பாடசாலை செல்லும் மாணவர்கள் தொடக்கம் உலகின் பெரிய விஞ்ஞானிகள் வரை அனைவராலும் பேசப்படுவதும், தீவிரமாக ஆராயப்பட்டு வருகிறதுமான காரியம் பூமியின் அழிவு.

2012ம் ஆண்டின் இறுதியில் உலகம் அழியப் போகிறது என்று சில சிறுவர்கள் வேடிக்கையாகவும், வளர்ந்தோர் பலர் அதை உண்மையெனவும் பேசுவதை செவிமடுத்திருக்கக்கூடும். விஞ்ஞானிகள் கூட சில உரிய ஆதாரங்களோடு அதைக் கூறியுள்ளனர். இவையெல்லாம் ஒருபுறமிருக்க எமது கண்களின் முன்னாலேயே இடம்பெற்றுக் கொண்டிருக்கும் பாரிய அழிவுகளும், இயற்கை அனர்த்தங்களும் எம்மையும் அவ்வாறே சிந்திக்கத் தூண்டிவிடக் கூடும். ஆனாலும் கிறிஸ்துவை விசுவாசித்து ஆண்டவருடைய சத்திய வார்த்தைகளை ஏற்றுக் கொண்டுள்ள நாம் இந்த சூழ்நிலைகளை எவ்வாறு எதிர்கொள்கிறோம்? இந்த விடயம் பற்றி எமது சிந்தையில் என்ன இருக்கிறது?

ஆண்டவர் இந்த உலகத்திலுள்ள எல்லார் மீதும் அன்பு கூர்ந்ததினால் தமது ஒரே பேறான குமாரன் இயேசுவை தாழ்மையின் ரூபமாய், நம்முடைய பாவங்களை நிவிர்த்தி செய்கிற கிருபாதார பலியாக உலகுக்கு அனுப்பினார். அது கிறிஸ்துவின் "முதலாம் வருகை". உலகின் மீட்புக்காகவும், மனிதரின் பாவங்களை அடியோடு துடைக்கவும், கொடூர சிலுவைக்கு தம்மை ஒப்புக்கொடுத்து பாடுகளனுபவித்து, தனது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடைசிச் சொட்டு இரத்தத்தையும் எமக்காக சிந்தி, மரித்து, மூன்றாம் நாள் மரணத்தை வென்று பரலோகத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டார். எமக்காக இன்றுவரை பிதாவிடம் பரிந்து பேசிக்கொண்டிருக்கிறார்.

மீண்டும் மனுஷகுமாரன் மிகுந்த வல்லமையோடும், மகிமையோடும் மேகங்களின் மேல் வரப் போகிறார் (லூக்கா 21:27). இதுவே கிறிஸ்துவின் இரண்டாம் வருகையாகும். இந்த வருகையானது முற்றிலுமாய் இவ் உலகத்தில் வாழ்ந்தோர், வாழ்ந்து கொண்டிருப்போரை அவர்களின் கிரியைகளுக்குத்தக்கதாக நியாயந் தீர்ப்பதாகவே அமையும். இந்த நியாயத் தீர்ப்பின் முடிவு நித்திய வாழ்வு அல்லாவிட்டால் நித்திய மரணம். ஆனாலும் உலகத்தின் முடிவின் நாளையோ அல்லது மனுஷகுமாரனின் வருகையின் நேரத்தையோ யாராலும் அனுமானிக்கவோ, முன்னறிவிக்கவோ முடியாது என்பதைத் தெளிவாகப் புரிந்து கொள்ளவேண்டும். கரத்தருடைய வார்த்தை இதைக்குறித்து இப்படியாகச் சொல்கிறது. "அந்த நாளையும் அந்த நாழிகையையும் பிதா ஒருவர் தவிர மற்றொருவரும் அறியான்" - (மாற்கு 13:32).

வருகையின் நாளை யாரும் அறியமுடியாவிட்டாலும், கடைசி காலங்களுக்குரிய, உலகத்தின் முடிவுக்குரிய சில அடையாளங்களை இயேசு தமது சீஷர்களுக்கும், அவரது பிள்ளைகளான எமக்கும் முன்னறிவித்துச் சென்றுள்ளார்.

- யுத்தங்களும் யுத்தங்களின் செய்திகளையும் கேள்விப்படுவீர்கள் (மத்.24:6).
- ஜனத்துக்கு விரோதமாய் ஜனமும், ராஜ்ஜியத்துக்கு விரோதமாய் ராஜ்ஜியமும் எழும்பும் (மத் 24:7)
- பஞ்சங்கள், கலகங்கள் (மாற்கு 13:8)
- கொள்ளை நோய்கள் (மத் 24:7)
- மகா பூமியதிர்ச்சிகள் (லூக்கா 21:11)
- விசுவாசிகள் துன்புறுத்தப்படுவார்கள் (லூக்கா 21:12)
- கள்ளத் தீர்க்கதரிசிகள் எழும்புவார்கள் (மத் 24:11)
- அக்கிரமம் / பாவம் பெருகுவதினால் அன்பு தணிந்துபோம் (மத் 24:12)
- ராஜ்ஜியத்தின் சுவிசேஷம் பூலோகமெங்கும் சாட்சியாக அறிவிக்கப்படும் (மத் 24:14).

மேலும் கொடிய கடைசி காலங்களில் உலகத்திலுள்ள மனுஷர்கள் தற்பிரியராயும், பணப் பிரியராயும், வீம்புக்காரராயும், அகந்தையுள்ள


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வர்களாயும், தூஷிக்கிறவர்களாயும், தாய் தகப்பன்மாருக்கு கீழ்ப்படியாதவர்களாயும், நன்றியறியாதவர்களாயும், பரிசுத்தமில்லாதவர்களாயும், சுபாவ அன்பில்லாதவர்களாயும், இணங்காதவர்களாயும், அவதூறு செய்கிறவர்களாயும், இச்சையடக்கமில்லாதவர்களாயும், கொடுமையுள்ளவர்களாயும், நல்லோரைப் பகைக்கிறவர்களாயும், துரோகிகளாயும், துணிகரமுள்ளவர்களாயும், இறுமாப்புள்ளவர்களாயும், தேவப்பிரியராயிராமல் சுகபோகப் பிரியராயும், தேவ பக்தியின் வேஷத்தைத் தரித்து அதின் பெலனை மறுதலிக்கிறவர்களாயும் இருப்பார்கள் (II தீமோ 3:1-5).

ஆண்டவரால் வேறுபிரிக்கப்பட்டு, அவரின் நடத்துதலோடு வாழும் அவரின் பிள்ளைகளாகிய நாம் அப்படிப்பட்ட மனுஷர்களை விட்டு விலகி, வசனத்தில் நிலைத்திருந்து, எப்போதும் விழித்திருந்து, ஜெபம் பண்ணி நித்திய வாழ்வைப் பெற்றுக்கொள்ள எம்மை ஆயத்தப்படுத்துவோமா?

**அநியாயம் செய்கிறவன் இன்னும் அநியாயஞ் செய்யட்டும்... பரிசுத்தமுள்ளவன் இன்னும் பரிசுத்தமாயிருக்கட்டும் (வெளி 22:11)**

சகோ.T.எமிலி






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெதடிஸ்த தினத்தையொட்டி

# மெதடிஸ்தன் என்பவன் யார்?

கிறிஸ்தவர்களாகிய நாம் ஒவ்வொரு வருடமும் ஜூன் மாதம் மெதடிஸ்த தினத்தைக் கொண்டாடுகிறோம். எனினும் நாம் ஒவ்வொருவரும் மெதடிஸ்தனாக வாழ்கின்றோமா? என்பதை ஆராய்ந்து பார்க்க வேண்டியவர்களாக இருக்கிறோம். ஜோன் வெஸ்லி இப்படியாக ஒரு கூற்றைக் கூறியுள்ளார்.

"Methodist is a friend of all. An enemy of none" அதாவது மெதடிஸ்தன் என்பவன் அனைவருக்கும் நண்பன். எவருக்குமே எதிரியல்ல"

ஜோன் வெஸ்லி மெதடிஸ்தன் என்பவனில் பின்வரும் 7 விடயங்களும் காணப்பட வேண்டும் எனக் கூறுகிறார்.

01. (Born again experience) மறுபடி பிறந்த அனுபவம்
(Heart warming experience) இதயம் அனலடைந்த அனுபவம்

02. பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொண்ட அனுபவமும் சாட்சியின் வாழ்க்கையும். (அப்போஸ்தலர் 1:8, கலாத்தியர் 5:22-23, ரோமர் 12:6-8)

03. எமது வாழ்க்கையில் வேதாகமம் மையமாக இருக்க வேண்டும்.

04. தனிப்பட்ட வாழ்விலும் பொது வாழ்விலும் எமது வாழ்க்கை சாட்சியின் வாழ்வாக அமைய வேண்டும்.
அப்போஸ்தலர் 1:8 இன் படி,
எருசலேம் ⇨ சொந்த வீடு
யூதேயா ⇨ அயல் வீடு
சமாரியா ⇨ எதிரிகள்
பூமியின் கடைசி பரியந்தம் ⇨ இயேசுவின் 2ம் வருகை / நாம் இறக்கும்வரை

05. வகுப்பு கூட்டங்களில் ஒழுங்காக கலந்துகொள்ள வேண்டும். வகுப்புக் கூட்டங்களில் ஜெபம், வேதபடிப்பு, சாட்சி என்பன காணப்பட வேண்டும்.

06. வழிபாட்டை உயிர்ப்புடன் மாற்ற எமது பங்களிப்பும் இருக்க வேண்டும்.

07. பூமியின் கடைசி பரியந்தம் வரையும் சகல ஜாதிகளுக்கும் நற்செய்தி சொல்ல வேண்டும். (மத்தேயு 28:19-20).

சகோதரி றெயூமி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அழிவின் விளிம்பில்
## ஒரு பெண்ணின் அர்ப்பணிப்பு

**எஸ்தர் புத்தகத்திலிருந்து.....**

எமது வேதாகமத்தில் குறிப் பிடப்பட்டுள்ள சில பெண்கள் வரலாற்றில் முக்கிய இடத்தைப் பெற்றுள்ளனர் / வரலாற்றையே மாற்றியுள்ளனர் எனும் கருத்துக்கு மாற்றுக்கருத்து இல்லை எனலாம்.

**எஸ்தரைப் பற்றி :**

எஸ்தர் ரூபவதியும், சௌந்தரியமுமான ஒரு யூத பெண். இவளுக்கு தாயும் தகப்பனும் இல்லை. யவீருவின் குமாரனாகிய மொர்தகாய் தனது சிறிய தகப்பன் மகளான எஸ்தரை அவளது பெற்றோரின் மரணத்துக்குப் பின் தனது குமாரத்தியாக வளர்த்தான். எஸ்தரோ மொர்தகாயின் வார்த்தைகளுக்கு கீழ்ப்படிந்தவளாக வாழ்ந்து வந்தாள்.

**ராஜ சமூகத்தில் மேன்மை :**

இந்து தேசம் முதல் எத்தியோப்பியா தேசம் வரைக்குமுள்ள நூற்றிருபத்தேழு நாடுகளையும் அரசாண்ட அகாஸ்வேரு மன்னன் ராஜஸ்திரியாகிய வஸ்தி தனது கீழ்ப்படியாமற் போனதன் நிமித்தமாய் கடுங்கோபமடைந்து, தனக்குள்ளே மூர்க்கம் கொண்ட அகாஸ்வேரு, வஸ்தி இனி ராஜாவாகிய அகாஸ்வேருக்கு முன்பாக வரக்கூடாது என்றும், அவளுடைய ராஜமேன்மையை அவளைப் பார்க்கிலும் உத்தமியான மற்றொரு ஸ்திரிக்குக் கொடுப்பதாக ராஜ கட்டளையிட்டு, நடைமுறைப் படுத்தினான். வஸ்தியினுடைய ராஜ மேன்மையை அளிப்பதற்கு தனது ராஜ்யத்திலுள்ள எல்லா நாடுகளிலும் இருந்து ரூபவதியான கன்னிப் பெண்களை கூடிவரச் செய்தான். இவர்கள் எல்லாரைப் பார்க்கிலும் எஸ்தருக்கு தன்னைக் காண்கின்ற எல்லார் கண்களிலும் தயை கிடைத்தது. ராஜா சகல ஸ்திரிகளைப் பார்க்கிலும் எஸ்தர் மேல் அன்பு வைத்தான். சகல கன்னிகைகளைப் பார்க்கிலும் அவளுக்கு அவன் சமூகத்தில் அதிக தயையும் பட்சமும் கிடைத்தது. ஆகையால் அவன் ராஜ கிரீடத்தை அவள் சிரசின்மேல் வைத்து, அவளை வஸ்தியின் ஸ்தானத்திலே பட்டத்து ஸ்திரியாக்கினான்.

**ஆமானுடைய தந்திரம் / யூதரை தரிசிக்க திட்டம்**

அகாஸ்வேரு தன்னிடத்திலுள்ள எல்லா பிரபுக்களுக்கு மேலாக உயர்த்தி வைத்த அம்மெதாத்தாவின் குமாரனாகிய ஆகாகியனான ஆமானை அரண்மனை வாசலில் இருக்கிற ராஜாவின் ஊழியக்காரர் எல்லாம் வணங்கி நமஸ்கரிக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும் என கட்டளையிட்டிருந்தான். ஆனாலும் யூதனாகிய மொர்தகாய் அவனை வணங்கவும் இல்லை. நமஸ்கரிக்கவும் இல்லை. இதனால் கோபமூண்டவனாய் மொர்தகாயை மாத்திரமல்ல, அவனுடைய முழு இனத்தையுமே அழிக்க திட்டம் பண்ணினான். அகாஸ்வேரு ராஜ்ய பாரம் பண்ணின அனைத்து இடங்களிலும் இருக்கிற அனைத்து யூதர்களும் அழிக்கப்பட வேண்டும் என ராஜாவினுடைய முத்திரை பதித்த ஓலையை எல்லா பிரதானிகளுக்கும், பிரபுக்களுக்கும் அனுப்பினான். இதை அறிந்த மொர்தகாய் தன்வஸ்திரங்களை கிழித்து, இரட்டுடுத்தி, சாம்பலைப் போட்டுக்கொண்டு ராஜ அரண்மனை மட்டும் போனான். அவனோடு இதைக் கேள்விப்பட்ட அனைத்து யூதர்களும், மகா துக்கமாய், உபவாசமும், அழுகையும், புலம்பலும் உண்டாய், அனேகர் இரட்டுடுத்தி சாம்பலிலே கிடந்தார்கள்.

**எஸ்தரின் பங்கு:**

இதை அறிந்துகொண்ட எஸ்தர் முன்னர் தயங்கினாலும் பின்னர் மொர்தகாயின் சொல்லுக்குக் கீழ்ப்படிந்து, தனது ஜனத்தினுடைய கதறலை அறிந்து, "நானும் என் தாதிமாரும் உபவாசம் பண்ணுவோம்; இவ்விதமாக சட்டத்தை மீறி, ராஜாவினிடத்தில் பிரவேசிப்பேன். நான் செத்தாலும் சாகிறேன்" (எஸ்தர் 4:16) என்று தன்னை அர்ப்பணித்தாள். ராஜாவினுடைய கட்டளையை மீற முடியாது, அவருடைய அனுமதியின்றி அவருடைய சமூகத்தில் நிற்க முடியாது என்றும், அப்படி மீறினால் கொலைசெய்யப்படுவோம் என்றும் தெரிந்த ராஜஸ்திரி தன்னுடைய ஜனம் மீட்கப்பட நான் செத்தாலும் சாகிறேன் என தன்னை அர்ப்பணித்தாள்.

என்ன விதமான அர்ப்பணிப்பு என்று சற்று சிந்தித்துப் பாருங்கள். கிறிஸ்துவுக்குள் அன்பான என் தேவனுடைய ஜனமே, தேவ சித்தத்தைச் செய்ய தன்னை அர்ப்பணித்தாள். இன்றும் அழிக்கப்பட்டுக்கொண்டிருக்கிற எங்கள் ஜனங்களின் மத்தியில் கிறிஸ்தவர்களாகிய எங்களுடைய பங்கு என்ன? ஆயுதமோ, மனுஷனோ எங்களுக்கு விடுதலையை சந்தோஷத்தை சமாதானத்தைத் தரமுடியாது. மீட்பு கிறிஸ்துவிடம் இருந்து மாத்திரம் தான் வருகிறது. இப்படியான சூழ்நிலையில் தெரிந்துகொள்ளப்பட்டவர்களாகிய என்னுடையதும், உங்களுடையதும் பங்கு என்ன? எனக்கென்ன... நானும் எனது குடும்பமும் ஆசீர்வதிக்கப்பட்டிருக்கிறோம், சலுகைகளைப் பெற்றிருக்கிறோம், என்னால் எங்கேயும் போக முடிகிறது, என்னால் தடையற்ற வாழ்வு வாழ முடிகின்றது என்றெல்லாம் நம்மை மாத்திரம் பார்த்து திருப்திப்படுகிற வாழ்க்கை வாழப்போகின்றோமா? வாழ்கின்றோமா? இது என்னுடைய வேலை இல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதற்காய் நான் அழைக்கப்படவில்லை என்ற சாட்டுப்போக்கு சொல்லப் போகின்றோமோ? இப்படி அன்று எஸ்தர் தனக்குள்ளே நினைத்திருந்தால் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட சந்ததியின் நிலை என்ன? அன்று அப்படி ஒரு சந்ததி இல்லாமல் போயிருக்குமே!

அவள் உபவாசத்தோடும், அழுகையோடும் கர்த்தருடைய சமூகத்திலே இருந்து தன்னுடைய ஜனத்தின் இரட்சிப்புக்காய் தன்னை அர்ப்பணிக்கின்றாள். இதை வாசித்துக்கொண்டிருக்கின்ற கிறிஸ்துவுக்குள் அன்பான தேவ பிள்ளையே உன்னுடைய அர்ப்பணிப்பு என்ன?

அக்கிரமத்தின் கட்டுகளை அவிழ்க்கிறதும், நுகத்தடியின் பிணையல்களை நெகிழ்க்கிறதும், நெருக்கப்பட்டிருக்கிறவர்களை விடுதலையாக்கிவிடுகிறதும், சகல நுகத் தடிகளையும் உடைத்துப் போடுகிறதும்... அல்லவோ எனக்கு உகந்த உபவாசம் என ஏசாயா 56:6,7 இல் கர்த்தருடைய வார்த்தை கூறுகிறது. அப்பொழுதுதான்,

**உன் வெளிச்சமும் எழும்பும்**
**சுகவாழ்வு துளிர்க்கும்,**
**உன் நீதி உனக்கு முன்னாலே செல்லும்**
**கர்த்தருடைய மகிமை**
**உன்னை பின்னாலே காக்கும்**
**அப்பொழுது நீ கூப்பிடுவாய்**
**கர்த்தர் மறு உத்தரவு கொடுப்பார்**
**- (ஏசாயா 58:8,9)**

இன்று நீ அர்ப்பணிக்க ஆயத்தமா? இந்தக் காலத்தில் நீ மௌனமாய் இருந்தால், யூதருக்குக் காயமும் இரட்சிப்பும் வேறொரு இடத்திலிருந்து எழும்பும் (எஸ்தர் 4:14).

**அர்ப்பணிப்பின் வெற்றி :**

அவள் ராஜ சமூகத்தில் தேவ சித்தத்தின்படி மிகுந்த ஜெபத்தோடும், உபவாசத்தோடும் தன்னை தைரியத்தோடு அர்ப்பணித்து நின்றதன் மூலமாய், ராஜாவின் கண்களில் கர்த்தர் தயவை ஏற்படுத்தினார். துன்மார்க்க சிந்தனை கொண்டவன் கர்த்தருடைய பிள்ளையைத் தூக்கில் போடும்படி செய்த அதே தூக்குமரத்தில் தூக்கப்பட்டான். யூத ஜனங்கள் சம்பவிக்க இருந்த அழிவிலிருந்து மீட்கப்பட்டார்கள். கர்த்தருடைய பிள்ளை மொர்தகாய் ராஜ சமூகத்திலே உயர்த்தப்பட்டான். இன்றும் ஜீவிக்கிறதான நம்முடைய கர்த்தர் அர்ப்பணிப்புள்ள எஸ்தருக்காக, மொர்தகாய்க்காக காத்துக்கொண்டிருக்கிறார். நாம் ஆயத்தமா....!!

கிருபை நம் அனைவரோடும் கூட இருப்பதாக.

சகோ. R. கஜாநந்தன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிறுவர் பகுதி



# நம் நிலை என்ன?

ஒரு பெரிய நகர் பகுதியில் ரவி என்ற சிறுவன் தனது குடும்பத்துடன் வாழ்ந்து வந்தான். அவன் தன் வாழ்க்கையை தனது விருப்பப்படியே வாழ்ந்து வந்தான். யாருடைய சொல்லையும் கேட்பதில்லை. பெற்றோர், ஆசிரியர், பெரியோர் சொல்லும் எந்த புத்திமதிகளையும் அவன் கேட்பதில்லை. அடிக்கடி பொய் சொல்லிவிட்டு பாடசாலைக்குச் செல்லாமல், வகுப்புகளுக்குச் செல்லாமல் தன் நண்பர்களுடன் கடற்கரை, பூங்கா போன்ற இடங்களுக்குச் சென்று விளையாடுவதை அவன் வழக்கமாகக் கொண்டிருந்தான். இவ்வாறு ஒருநாள் வீட்டில் வகுப்புக்கு செல்வதாக பொய் சொல்லிவிட்டு தனது சைக்கிளில் மிக வேகமாக கடற்கரை நோக்கி செல்லும் போது பெரிய லொறி ஒன்றுடன் மோதி, விபத்தைச் சந்தித்தான். அவனை யாரோ வைத்தியசாலையில் பலத்த காயங்களுடன் அனுமதித்தனர். அவன் கண் விழித்துப் பார்த்தபோது தனது கால் ஒன்று இல்லை என்பதைக் கண்டு கதறிக் கதறி அழ ஆரம்பித்தான். அருகில் நின்ற தாயின் கரங்களைப் பிடித்து, உங்களின் சொல் கேட்டு நடந்திருந்தால் என் கால் எனக்கு கிடைத்திருக்குமே என்று கூறி அழுதான். எனினும், அவனுடைய தாய் அவனை மன்னித்து, அன்பாக அணைத்து தேற்றினாள். அன்றிலிருந்து அவன் அனைவருடைய சொல்லையும் கேட்டு கீழ்ப்படிவுள்ள பிள்ளையாக உண்மை கூறி நடப்பவனாக மாறினான்.

இன்று நம்மில் அநேகரும் ரவி போலவே வாழ்ந்து வருகிறோம். ஒரு இழப்பை சந்தித்த பின்னரே அவன் தன் நிலையை உணர்கிறான். நீதிமொழிகள் 1:8 இன்படி நாம் எம் தாய், தந்தையரின் சொல்லைக் கேட்டு நடக்க வேண்டும். கலாத்தியர் 5:19–21 இல் மாம்சத்தின் கிரியைகள் பற்றிக் கூறப்பட்டுள்ளது. இன்று நம்மில் எத்தனை பேர் பகை, விரோதம், கோபம், சண்டை, பொறாமை, களியாட்டம் போன்ற காரியங்களில் ஈடுபட்டுக் கொண்டு இருக்கிறோம். இவை அனைத்தையும் இயேசுகிறிஸ்து வெறுக்கிறார். நம்மை அவரின் செல்ல பிள்ளைகளாக வாழும்படியே அவர் விரும்புகிறார். அழிவுகளை / இழப்புக்களை சந்திக்க முன்பே நம் நிலையை உணர்வோமா? ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் செல்லப் பிள்ளையாக மாறுவோமா?

சிந்தியுங்கள்!
செயற்படுங்கள்!! முடிவு உங்கள் கரங்களில்...!!!

சகோதரி **P.R.ஜீவந்தி**
கோட்டைமுனை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# “இயேசு உன்னைத் தேற்றுகிறார்”

## சுவிசேஷ கூட்ட விபரம் – 2012

| | | | |
|---|---|---|---|
| 21-22. 06.2012 | மாலை 4.30 | - | வவுனியா |
| 23.06.2012 | மாலை 4.30 | - | அக்கராயன் |
| 24.06.2012 | மாலை 4.30 | - | ஆனைவிழுந்தான் |
| 25-26.06.2012 | மாலை 4.30 | - | மூதூர் கல்லடி |
| 27-28.06.2012 | மாலை 4.30 | - | திருக்கோவில் |
| 29.06.2012 | மாலை 4.30 | - | கோட்டைமுனை |
| 30.06.2012 | மாலை 4.30 | - | தன்னாமுனை |
| 01.07.2012 | மாலை 4.30 | - | தன்னாமுனை |



**எல்லோரும் வாருங்கள்!**

இயேசுவின் அன்பை இலவசமாய் அனுபவியுங்கள்!!

**போதகர் A. நித்தியராஜ்**

**போதகர் A. அதிசயராஜ்**

ஸ்தாபகர்கள், இரட்டைச்சகோதரர்கள்

இயேசு உன்னைத் தேற்றுகிறார் ஊழியங்கள் - இந்தியா

தொடர்புகள்: மெதடிஸ்த திருச்சபை, புளியந்தீவு-கோட்டைமுனை சேகரங்கள், மட்டக்களப்பு.

இப்புத்தகத்தை தங்களது சபைகளிலும், அறிமுகம் செய்ய விரும்புபவர்கள் தயவாய் எம்மைத் தொடர்பு கொள்ளவும். இதன் மூலமாய் வரும் ஆசீர்வாதங்கள் தங்களது வாழ்வையும், சபைகளையும் நிரப்புவதாக!

**மெதடிஸ்த வாலிபர் ஒன்றியம்**
**கோட்டைமுனை.**

கடிதத் தொடர்புகளுக்கு :


**ஆசிரியர்,**
**“வாலிபன்” சஞ்சிகை,**
மெதடிஸ்த ஆலயம், கோட்டைமுனை,
மட்டக்களப்பு, இலங்கை.
மின்னஞ்சல் :vaalipan_kyf@yahoo.com


சன் அச்சகம் - மட்டக்களப்பு. 065-2222597



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org